FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167277

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **9/2025** Date: நாள் **16.10.2025**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **1988 as amended by The Prevention** Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் **15.10.2025** Date to : நாள் வரை **15.10.2025**
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் **15.40 hrs** Time to : நேரம் வரை **21.30 hrs**
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **16.10.2025** Time : நேரம் **11.30 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** Time : நேரம் **11.30 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு புகார் மனு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 25 கி.மீ. மேற்கு.**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் பண்ருட்டி.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில்-அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்--

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **B.சுஜாதா**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் **இந்தியன்**
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ---
Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் **ஆய்வுக்குழு ஆய்வாளர்**
(g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்**
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 16.10.2025 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.G.சுஜாதா, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் G.சுஜாதா, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/681/2025 நாள் : 16.10.2025 பொருள் : திடீர் ஆய்வு சோதனை – பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. _கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் 15.10.2025 ஆம் தேதி

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. ANDALAGAN
Rank: நிலை Inspector No. எண் ... Police.
VACB, Cuddalore.

தனித்தாள்

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற.எண்.9/2025 ன் பக்கம் 1ல் வரிசை எண் 7ல் குற்றம்சாட்டப்பட்டவர்களின் முழுமையான விவரங்கள்.

(1) திருமதி.H.சுதா, கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

(2) திரு.J.பிரகாஷ், Date Entry Operator, ELCOT BONTON Pvt. Ltd., மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

(3) திரு.Y.நாசர்தீன், த/பெ.யாசிம், நெ.A/4, ஜாகிர் உசேன் தெரு, V.ஆண்டிகுப்பம், பண்ருட்டி.

(4) திரு.H.ராஜேஷ்குமார், த/பெ. ஹரிகிருஷ்ணன், நெ.36, கடை வீதி, காராமணிகுப்பம், கடலூர்.

(5) திரு.K.ராம்கணேஷ், த/பெ.கோசல்ராம், நெ.36/11, அன்வர்ஷா நகர், 3வது தெரு, பண்ருட்டி.

(6) திரு.K.முகமது ஹனிபா, த/பெ.காசிம், நெ.36, போலிஸ் லைன், 4வது குறுக்கு தெரு, பண்ருட்டி.

(7) திரு.M.ஜான், த/பெ, மோசஸ், நெ.47, கிழக்கு தெரு, பணிக்கன்குப்பம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்

எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது, எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் 15.10.2025 பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள அலுவலக ஊழியர்களை சந்தித்து, வரும் தீபாவளி பண்டிகை செலவு தொடர்பாக சந்தித்து பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் 14.00 மணிக்கு சென்றேன். அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தேன். மேலும் எனது தலைமையில் மேற்படி பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 15.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்களாக செயல்படும் வெளிநபர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுத்திருந்த அல்லது கொடுக்க இருக்கின்ற பணத்தை ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 14.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு பண்ருட்டி– கும்பகோணம் சாலையில் உள்ள பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சற்று தூரத்தில் மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை கண்காணித்து மாலை சுமார் 15.40 மணிக்கு கிழக்கு பார்த்து அமைந்து இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். முன் ஹாலில் நின்றிருந்த பெண்மணியை விசாரிக்க தான் கண்காணிப்பாளர் என்று கூறினார். அவரிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் பற்றி விசாரித்த போது, அவர் அலுவலகத்தில் இல்லை என்றும், அவர் நெய்வேலி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதால் இன்று மதியம் நெய்வேலி அலுவலகத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். பின்னர் நான் அவரிடம் பெயர் விலாசம் பற்றி கேட்க தனது பெயர் H.சுதா, வயது 43, க/பெ.ராஜேந்திரன், கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி என்றும் வீட்டு முகவரி நெ.23,குட்டைத் தெரு, வண்ணாரபாளையம் பின்புறம், கடலூர் என அறிமுகம்

செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, ஆய்வு செய்யபோகும் விவரத்தை தெரிவித்து ஆய்வின்போது உடனிருக்குமாறு அறிவுறுத்தி, அவர் முன்னிலையில் நானும், எனது அறிவுரையின்படி காவல் ஆய்வாளர் அன்பழகன் மற்றும் காவல் குழுவினருடன் சுயபரிசோதனை செய்துகாண்பித்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் அவரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் ரொக்க கையிருப்பு பதிவேட்டை கேட்க, அவர் அப்பதிவேட்டை அலுவலகத்திலிருந்து எடுத்து ஆஜர்படுத்தினார். அப்போது என்னுடன் வந்த காவல் குழுவினர் உதவியுடன் முன் ஹாலில் இருந்த சில நபர்களை ஹாலிலேயே உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், காவல் ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் ஹாலுக்கு வடகிழக்கில் அமைந்துள்ள கண்ணாடி அறையை சோதனை செய்யும்போதும், அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்த பெண்மணியை விசாரிக்க அவர் தனது பெயர் S.ரம்யா, த/பெ. செல்வராஜ், உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, என்றும் தனது வீட்டு முகவரி – நெ.75, பள்ளத்தெரு, வெள்ளப்பாக்கம், கடலூர் வட்டம் மற்றும் மாவட்டம் என்று கூறினார். பின்னர் அவரை சோதனை செய்ததில், அவரிடம் ரூ.680/– இருந்தது. மேற்படி பணம் ரூ.680/–அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. பின்னர் அதற்கு அடுத்து அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி அறையானது தனது அறை என்று கண்காணிப்பாளர் கூறினார். அந்த அறையை சோதனை செய்ய கண்காணிப்பாளரின் கைப்பையில் ரூ.3,160/– இருந்தது. ஆனால் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேட்டில் 15.10.2025 ஆம் தேதியில் ரூ.460/– என பதிவு செய்திருந்தார். எனவே, மேற்படி பணம் ரூ.460/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதி பணம் ரூ.2,700/– (500x5, 200x1) சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அறைக்கு வடபுறத்தில் உள்ள அறையில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் R. அசாருதீன் அகமது (வயது 29), த/பெ. முகமது ரபீக், இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி என தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் ரூ.430/– பணம் இருந்தது. அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர் ரொக்க கையிருப்பு

பதிவேட்டில் 15.10.2025 ஆம் தேதியில் ரூ.430/– பதிவு செய்திருந்ததால் மேற்படி பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கு மேற்கு புறத்தில் அமைந்துள்ள அறையை சோதனை செய்ய அந்த அறையில் யாரும் இல்லை. மேற்படி அறை யாருடையது என கண்காணிப்பாளரிடம் கேட்டபோது, மேற்படி அறை மோட்டார் வாகன ஆய்வாளர் அறை என்று கூறினார். அந்த அறையை சோதனை செய்ய பணம் எதுவும் இல்லை. பின்னர் ஹாலுக்கு வடமேற்கு திசையில் உள்ள கண்ணாடி அறையை சோதனை செய்ய, அந்த அறையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் J.பிரகாஷ் (வயது 34), த/பெ. R. ஜோதி, Data Entry Operator ஆக பணிபுரிவதாகவும், தனது வீட்டு முகவரி – நெ.18/A, இம்பீரியல் ரோடு, சாலை நகர், கடலூர் முதுநகர் என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது பேண்டின் வலது பாக்கெட்டில் ரூ.2,700/– இருந்தது. ஆனால் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேட்டில் 15.10.2025 ஆம் தேதியில் பதிவு எதுவும் இல்லை என்பதாலும், மேற்படி பணத்திற்கான சரியான முகாந்திரம் கூறாததாலும் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.2,700/– (500x5, 200x1) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த நபர்களை விசாரிக்க 1) நாசர்தீன் (வயது 43), த/பெ.யாசின், நெ.7/4, ஜாகிர் உசேன் தெரு, வி.ஆண்டிக்குப்பம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் என்றும், தான் பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கோப்புகள் அடுக்குவது போன்ற வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். தனக்கு பதிவிற்கு வரும் வாகன டீலர்களிடம் செலவிற்கு பணம் பெறுவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது வலது பேன்ட் பாக்கெட்டில் ரூ.2,200/– (500x4, 200x1) இருந்தது. மேற்படி பணத்திற்கான சரியான முகாந்திரம் கூறாததாலும் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.2,200/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இடது பேன்ட் பாக்கெட்டில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன விற்பனையாளர்களின் பெயர்கள், விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்குண்டான கமிஷன் தொகை குறிப்பிடப்பட்டிருந்த 4 வெள்ளை காகிதங்ககள் மற்றும் ஒரு துண்டு சீட்டுகள் இருந்தன. மேற்படி காகிதங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) K.ராம்கணேஷ் (வயது 37), த/பெ.கோசல்ராம், நெ.36/11, அன்வர்ஷா நகர், 3வது தெரு, பண்ருட்டி என்றும் தான் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்துவருவதாகவும், ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட இருசக்கர வாகனத்தின் பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமாக வந்ததாகவும் தெரிவித்தார். அவரை

சோதனை செய்ய அவரிடம் ரூ.13,700/– (500x23, 200x11) இருந்தது. மேற்படி பணம் தொடர்பாக ராம்கணேஷ் அவர்களை விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.13,700/– குறித்து உரிய முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் மேற்படி பணம் மோட்டார் வாகன அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்ததாக தெரியவந்ததன் பேரில் மேற்படி பணம் ரூ.13,700/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 3) K.முகமது ஹனீபா (வயது 62), த/பெ.காசிம், நெ.36, 4வது குறுக்கு தெரு, போலீஸ் லைன், பண்ருட்டி என்றும், தான் பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் புரோக்கராக உள்ள நாசருதீன் என்பவரை பார்க்க அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3000/– (500x5, 200x2, 100x1) இருந்தது. மேற்படி பணம் தொடர்பாக முகமதி ஹனீபா அவர்களை விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.3,000/– குறித்து உரிய முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினாலும், மேற்படி பணம் மோட்டார் வாகன அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்ததாக தெரியவந்ததன் பேரில் மேற்படி பணம் ரூ.3,000/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 4) H.ராஜேஷ்குமார் (வயது 38), த/பெ.ஹரிகிருஷ்ணன், நெ.36, கடை வீதி, காராமணிகுப்பம், கடலூர் என்றும் தான் கடலூர் நத்தப்பட்டில் உள்ள மகேந்திரா டூரிஸ்ட் வேனை பதிவு செய்வதற்காக அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,800/– (500x3, 100x3) இருந்தது. மேற்படி பணம் தொடர்பாக ராஜேஷ்குமார் அவர்களை விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.1,800/– மேற்படி வாகனத்திற்கு பதிவு எண் பெறுவதற்கு அலுவலக செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.1,800/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5) M.ஜான் (வயது 54), த/பெ.மோசஸ், நெ.47, கிழக்கு தெரு, பனிக்கன்குப்பம், பண்ருட்டி என்றும் தான் பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் எதிரில் MAM என்ற பெயரில் ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் Net Centre நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். தான் ஓட்டுநர் உரிமம் பெறுவது சம்மந்தமாக அலுவலகம் வந்தாக தெரிவித்தார். அவரை சோதனை செய்து பார்க்க அவரது பேன்ட் பாக்கெட்டில் ரூ.2,800/– (200x14) பணம் இருந்தது தெரியவந்தது. மேற்படி பணம் தொடர்பாக ஜான் அவர்களை விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.2,800/– குறித்து உரிய முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் மேற்படி பணம் மோட்டார் வாகன அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்ததாக தெரியவந்ததன் பேரில் மேற்படி பணம் ரூ.2,800/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரணை செய்ய பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கடந்த ஒரு

வாரமாக வசூல் செய்யப்பட்ட பணத்தை நாசர்தீன் மூலம் தன்னிடம் கொடுத்து வைத்திருப்பதாகவும், அந்த பணத்தை எதிரில் உள்ள தனது அலுவலகத்தின் மேஜை டிராயரில் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்துச்சென்றால் தனது அலுவலக மேஜை டிராயரில் வைத்துள்ள பணத்தை எடுத்து ஆஜர் செயவதாக தெரிவித்ததன் பேரில், நான் காவல் குழுவினருடன் ஜான் அவர்களை MAM அலுவலகத்திற்கு அழைத்துச்சென்று அவரது அலுவலக மேஜை டிராயரில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.1,59,200/– (500x290, 100x142) இருந்தது. மேற்படி பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று மேல்விசாரணை செய்யவேண்டி கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி ஜான் மற்றும் காவல் குழுவினருடன் மீண்டும் பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்து, மேற்குறிப்பிட்ட 1) N.சுதா, 2) பிரகாஷ், 3) ராஜேஷ்குமார், 4) நாசர்தீன், 5) ராம்கணேஷ், 6) K.முகமது ஹனீபா, 7) ஜான் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) பணியாளர் ரொக்க பதிவேடு, 2) பணியாளர்களின் வருகை பதிவேடு, 3) தற்காலிக பணியாளர்களின் வருகை பதிவேடு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மொத்த பணம் ரூ.1,88,100/– (500 x 335, 200 x 30, 100 x 146) மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.1,88,100/–ஐ யாரால் கொடுக்கப்பட்டது என்பதையும் மற்றும் பிற சந்தேக பணப் பரிமாற்றங்கள் ஏதேனும் இருந்துள்ளதா என்று குறித்துக் கண்டறிய பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இயங்கி வந்த CCTV–ன் PLEXONICS PL–2410MG–8PL என்ற பெயர் கொண்ட DVR விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 15.40 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. 15.10.2025ந் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,88,100/–, (1) திருமதி.H.சுதா, கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம் 2) திரு.J.பிரகாஷ், Date Entry Operator, ELCOT BONTON Pvt. Ltd., மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம், 3) திரு.Y.நாசர்தீன், த/பெ.யாசிம், நெ.A/4, ஜாகிர் உசேன் தெரு, V.ஆண்டிகுப்பம், பண்ருட்டி, 4) திரு.H.ராஜேஷ்குமார், த/பெ. ஹரிகிருஷ்ணன், நெ.36, கடை வீதி, காராமணிகுப்பம், கடலூர், 5) திரு.K.ராம்கணேஷ், த/பெ.கோசல்ராம், நெ.36/11, அன்வர்ஷா நகர், 3வது தெரு,

பண்ருட்டி, 6) திரு.K.முகமது ஹனிபா, த/பெ.காசிம், நெ.36, போலிஸ் லைன், 4வது குறுக்கு தெரு, பண்ருட்டி, 7) திரு.M.ஜான், த/பெ, மோசஸ், நெ.47, கிழக்கு தெரு, பணிக்கன்குப்பம், பண்ருட்டி வட்டம் ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், தடயப்பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 16.10.2025ந்தேதி காலை 11.30 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். எனவே (1) திருமதி.H.சுதா, கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம் 2) திரு.J.பிரகாஷ், Date Entry Operator, ELCOT BONTOiN Pvt. Ltd., மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம், . 3) திரு.Y.நாசர்தீன், த/பெ.யாசிம், நெ.A/4, ஜாகிர் உசேன் தெரு, V.ஆண்டிகுப்பம், பண்ருட்டி, 4) திரு.H.ராஜேஷ்குமார், த/பெ. ஹரிகிருஷ்ணன், நெ.36, கடை வீதி, காராமணிகுப்பம், கடலூர், 5) திரு.K.ராம்கணேஷ், த/பெ.கோசல்ராம், நெ.36/11, அன்வர்ஷா நகர், 3வது தெரு, பண்ருட்டி, 6) திரு.K.முகமது ஹனிபா, த/பெ.காசிம், நெ.36, போலிஸ் லைன், 4வது குறுக்கு தெரு, பண்ருட்டி, 7) திரு.M.ஜான், த/பெ, மோசஸ், நெ.47, கிழக்கு தெரு, பணிக்கன்குப்பம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (G.சுஜாதா) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர். ஒப்பம் ------ (G.சுஜாதா) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 16.10.2025 at about 11.30 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.9/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 16.10.2025 at 12.00 hours. sd/- xxxx 16.10.2025 (P.ANBALAGAN), Inspector of Police, V&AC, Cuddalore.

16/10/2025

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore.